விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 185 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 07 வியாழக்கிழமை (22.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# பொறுப்புக்கூறத் தவறினால்
# இலங்கை மீது சர்வதேச விசாரணை

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் எச்சரிக்கை

(ஜெனிவா)

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறலை நிறைவேற்ற இலங்கை அரசாங்கம் தவறும் பட்சத்தில் இலங்கை மீது சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்படலாம் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நடா அல் நஷிஃப் எச்சரித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)






## ஒரே நாளில் மூவர் சுட்டு படுகொலை

(கொழும்பு)

நாட்டில் ஒரே நாளில் மூவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வெவ்வேறு பிரதேசங்களில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொட்டாவை 11

## ஐ.நா தீர்மானங்களை மீண்டும் நிராகரித்தது இலங்கை அரசு

(ஜெனிவா)

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பாக வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் ஐ.நாவின் தீர்மானத்தை முற்று முழுதாக நிராகரிப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது பரந்துபட்ட அளவில் சட்ட மற்றும் அரசியல் ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தும் என நேற்றைய ஐ.நா மனித உரிமைகள் அமர்வில் 12




## எரிந்த வீட்டினுள் சடலம் மீட்பு
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா தேக்கவத்தை பகுதியில் நேற்று அதிகாலை தீப்பற்றி எரிந்த வீட்டினுள் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் 11

## உதய கம்மன்பிலவுக்கு எதிராக குருந்தூர்மலையில் ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு)

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் முல்லைத்தீவு குருந்தூர்மலை விஜயத்தை எதிர்த்து அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - 11

## தமிழர் - சிங்களவர்களிடையே பேதங்கள் கிடையாது
### குருந்தூரில் கம்மன்பில



(குருந்தூர்மலை)

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சகோதரர்கள் எமக்குள் எவ்விதமான பேதங்களும் கிடையாது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 11

### போதிய மாணவர்கள் இல்லாததால்
## 194 பாடசாலைகள் வடக்கில் மூடப்பட்டுள்ளன
### வட மாகாண ஆளுநர் சார்ள்ஸ்



(வவுனியா)

வடக்கில் ஏறக்குறைய 194 பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமையால் மூடப்பட்டிருக்கின்றன என வட மாகாண 11

## விரைவில் அமைச்சரவை மாற்றம்; எதிர்க்கட்சியினருக்கும் அமைச்சுப் பதவி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஆளும் கட்சிக்கும் இடையில் அமைச்சரவை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த சில வாரங்களாக இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில், உரிய முறையில் செயற்படத் தவறிய, சில முக்கிய அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி மாற்றியமைப்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுகாதார அமைச்சு மற்றும் ஊடகத்துறை அமைச்சு என்பன இதில் அடங்குவதாக அரசாங்கத் தரப்பு தகவல் ஒன்று கூறுகிறது.

முன்னதாக ஜனாதிபதிக்கும், பசில் ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியினருக்கும் இடை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு



22.06.2023

உயர்திரு. முத்து இராதாகிருஷ்ணன்
(வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

Best Wishes!

கல்விக்காய் உமை உவந்தளித்த திருமகனே
கலைத்தாய்க்குப் பெருமை சேர்த்த கலைமகனே
அழகு வதனத்தின் அன்புப் புன்னகையால்
மனிதம் மதித்திடும் பெரும் புனிதனே
மாண்புடன் வாழ்த்துகின்றோம் நின்பணிதனையே

ஆசானாய் உயர் பதவி நிலை அதிகாரியாய்
நாற்பத்திரண்டாண்டுகள் நீண்டபணி செய்தீர்
நடந்தும், ஓடியும் நாற்றிசையும் நின்றீர்
வலயம், மாகாணம் வடக்குக் கிழக்கெல்லாம்
உச்சம் கண்டதுவே உம் பணியால்.

நின் அன்புப்பணி நிறைவில்
யாம் செய் நற்றவத்தால் யாழ்வலயம் பெற்றதுவே
நின்சேவை மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
நீடிய ஆயுளுடன், நின் அழகு குடும்பத்துடன்
வாழிய பல்லாண்டு, வாழ்க வளமுடனே.

(16039)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக
நலன்புரிச் சங்கம்


# ஊடகத்துறையை மேம்படுத்த நெறியாக்கம் அவசியம் – சஜித்

(கொழும்பு)

சுதந்திர ஊடகத் துறையை மேம்படுத்த நெறிமுறைக் கோவையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிட்டிருந்தார். இலத்திரனியல் ஊடகங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டமூலம் தொடர்பாக நேற்று பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிட்டிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இலத்திரனியல் ஊடகங்களை ஒழுங்குப்படுத்த சட்டமொன்று அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால், இந்த ஒழுங்குறுத்தல் நெறிமுறைகள் என்பது ஊடக நிறுவனங்களிடம்தான் காணப்பட வேண்டுமே ஒழிய, அரசாங்கத்திடம் இருக்கக்கூடாது.

இவ்வாறான சட்டங்கள் நாட்டுக்கு அவசியம் என்றாலும், இதன் அதிகாரங்கள் ஊடக நிறுவனங்களிடம்தான் காணப்பட வேண்டும் ஊடகவியலாளர்களின் பங்கு பற்றலுடன்தான் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். இது சுய ஒழுங்குபடுத்தல் செயற்பாடாக இருக்க வேண்டும்.

அரசாங்கத்திடம் அந்த அதிகாரம் சென்றால், அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகங்கள் பாதிக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. இது சுதந்திர ஊடகத்தை கட்டுப்படுத்தும் வகையில் அமைந்துவிடும் என்பதோடு, ஜனநாயகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

சுதந்திர ஊடகத் துறையை மேம்படுத்த நெறிமுறைக் கோவையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். ஊடகவியலாளர்களுக்கு சுய ஒழுங்குறுத்தல் ஒன்றை கொண்டுவருவதுதான் சிறப்பாக அமையும்.

இலத்திரனியல் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஊடாக, அரசாங்கம் அடக்குமுறையை மேற்கொள்ள முற்படுகிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

இந்த விடயம் தொடர்பாக அனைத்து தரப்புடனும் கலந்துரையாடி ஒரு நவீன ஊடக கலாசாரத்தை ஏற்படுத்துவோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# பண்பாட்டு பெருவிழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு பெருவிழா-2023 நாளை காலை 9 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதேச செயலாளர் சா.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். அரச அதிபர் அ.சிவபால சுந்தரன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி. இராஜமல்லிகை, சிவசுவந்திர சர்மா,கலாபூஷணம் குருசுமுத்து இராயப்பு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)


காரைநகர்
கிழவன்காடு கலா மன்றம்
அறநெறிப் பாடசாலை
நடத்தும்



மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

இடம்: கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்
காலம்: 23.06.2023 வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணி

கலாநிதி மூதறிஞர் வைத்தீசுவரக் குருக்கள் அரங்கு
நிகழ்ச்சிகள்

01) மாணிக்கவாசகர் சுவாமிகள் மங்கள இசை சகிதம் அரங்கிற்கு எழுந்தருளல், தீபாராதனை
02) தொடக்கவுரை:- வாழ்நாள் பேராசியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
03) சொற்பொழிவு :- முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்
தலைப்பு :- "யார்க்கெடுத்து உரைப்பேன்"
04) திருவாசகத் தேனிசை :- நுண்கலைமானி திருமதி. சித்திரா ஹவிக்குமார் (கலாமன்ற பண்ணிசை ஆசிரியர்)
05) பரிசில் வழங்கல் :- கலாநிதி மூதறிஞர் வைத்தீசுவரக் குருக்கள் ஞாபகார்த்தமாக கலாமன்ற மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட "திருவாசக மனனம்" போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கல்

குறிப்பு:- இந்நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை யாழ் கிளையிலிருந்து (இல.428, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - வண்ணை சிவன் கோவில் அருகாமை) பி.ப 3.45 மணிக்கு ஆரம்பமாகும்.

வைத்தீசுவரக் குருக்கள் அரங்கு நிகழ்ச்சிகள்

01) மாணிக்கவாசகர் சுவாமிகள் அரங்கிற்கு எழுந்தருளல், தீபாராதனை
02) தொடக்கவுரை
03) திருவாசக தேனிசை :- ஈழத்துப்பிரபல பண்ணிசைக் கலைஞர்கள்
04) சிந்தனைக்கு ஒரு விருந்து
05) சொற்பொழிவு :- ரிசி தொண்டர் சுவாமிகள்
06) நாட்டியர்ப்பணம் :- நெறியாள்கை. நுண்கலைமாணி. ஆ ஸ்ரீகாந்
07) விவாத அரங்க போட்டி

"சேவை என்பது தேவையறிந்து செய்தல்"
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிழவன்காடு கலா மன்றம்
காரைநகர்

கிழவன்காடு கலா மன்றம்
யாழ்.கிளை

(C-6794)


# பொறுப்பு...

ஐ.நா மனித உரிமைகள் அமர்வில் முன்வைத்த இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "ஆழமான அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு, பொறுப்புகூறல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவது மாத்திரமல்லாமல், மனித உரிமைகளை பாதுகாப்பதையும் உறுதிப்படுத்துமாறு இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் அரசாங்கத்தை அலுவலகம் வலியுறுத்துகின்றது.

உள்ளூர் பதற்றம் மற்றும் முரண்பாடுகளை தீர்க்கும் வகையில் தமிழ் கட்சிகளுடன் ஜனாதிபதி ஆரம்பித்துள்ள பேச்சுக்கள் மற்றும் தொல்பொருள், வனஇலாகா மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு காணிகளை சுவீகரிக்கப் போவதில்லை என்ற உறுதிமொழி ஆகியவற்றுடன் அனைத்து தரப்பினருக்குமான ஞாபகார்த்த நினைவுச் சின்னம் உட்பட கடந்த கால விடயங்களை கையாளுவது தொடர்பான அறிவிப்புகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

எனினும் இந்த விடயங்கள் புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகள் ஊடாக இந்த உறுதிமொழிகள் தெளிவாக தெரியக்கூடிய வகையில், இந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நல்லிணக்க பொறிமுறையான உண்மை ஆணைக்குழு தொடர்பான அறிவிப்பு குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் இரண்டு ஆணைக்குழுக்களை இலங்கை அரசாங்கம் அமைத்திருந்தது.

எனினும் அந்த ஆணைக்குழுக்கள் மூலம் பொறுப்புகூறல் நிறைவேற்றப்படவில்லை. காணாமல் போனோர் அலுவலகம் பாதிக்கப்பட்டவர்களை திருப்தி செய்யும் வகையில் எதிர்பார்த்த இலக்குகளை அடையவில்லை.

கடந்த காலம் தொடர்பான பொறுப்புக்கூறலில் கணிசமான இடைவெளி காணப்படுகின்றது. தண்டனை விலக்களிப்பு காணப்படும் வரை நீடித்த சமாதானத்தை அடைய முடியாது.

51/1 தீர்மானத்தின் கீழ் பொறுப்புகூறலை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் குறித்த முன்னேற்றம் தொடர்பாக அதற்கான குழு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இது தற்போது முன்னெடுக்கப்படும் குற்றவியல் விசாரணைகளுக்கு உறுதியான ஆதரவளிக்கும் ஒன்றாக இருக்கும். ஐ.நா மற்றும் ஏனைய மூலங்கள் ஊடாக சேகரிக்கப்படும் தரவுகள் எதிர்கால பொறுப்புகூறல் முயற்சிகளுக்கு பயன்படுத்த முடியும்.

இந்த செயற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்கள் முக்கிய பங்கை வகிப்பார்கள். பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புகள் மற்றும் குடிசார் அமைப்புக்களுடன் செயற்றிறன் மிக்க ஈடுபாடு இதில் இருக்கும்.

கடந்த கால மீறல்கள் குறித்து இலங்கை அதிகாரிகள், நம்பகமான விசாரணைகள் மற்றும் வழக்கு தொடுக்கும் செயற்பாடு உள்ளிட்ட ஏனைய பொறுப்புகூறல் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை.

இந்தப் பொறுப்புகூறல் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாவிடின் சர்வதேச சமூகம் அதனை பூர்த்தி செய்வதற்கான பங்கை [illegible] (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



நீர்வேலி நலன்புரிச் சங்கம் இலண்டன் அமைப்பின் பொருளாளரும் எமது பாலர் பகல் விடுதியின் ஆயுள்கால உறுப்பினரும் சமூக ஆர்வலருமான திரு. செ.சுபேஸ்குமார் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் ஜெயலட்சுமி அம்மா செல்வரத்தினம்

அவர்கள் 18.06.2023 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(16043)

பாலர் பகல் விடுதி, முன்பள்ளி சமூகத்தினர்
நீர்வேலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் மலை தமிழர்களுக்கு சொந்தமானது- கஜேந்திரன் எம்.பி



(கொழும்பு)

முல்லைத்தீவு குருந்தூர் மலைப் பகுதியில் இருந்து தமிழ் மக்களை பலவந்தமாக வெளியேற்றிவிட்டு. அங்கு சிங்களவர்களை குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு குருந்தூர் மலைப் பகுதியிலுள்ள காணிகள் சிங்களவர்களுக்கு சொந்தமானது என பேராசிரியர் எல்லாவல மேதானந்த தேரர் எழுதிய கடிதம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது கண்டனம் வெளியிட்டுள்ளார்.

சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் இராணுவ இயந்திரத்தையும், பொலிஸ் இயந்திரத்தையும் அரச இயந்திரங்களையும் பயன்படுத்தி தமிழ் தேசத்தின் மீது மிகத் தீவிரமான ஒடுக்குமுறைகளை தீவிரப்படுத்திருக்கின்றார்கள்.

பின் கதவால் ஆட்சி பீடம் ஏறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கையில் தனது அதிகாரத்தை தக்க வைப்பதற்காக இனவாதிகளின் விருப்பங்களுக்கு ஏற்றபடி ஆடுகின்ற செயற்பாடுகளையும் அவதானிக்க முடிகிறது.

தமிழர்களுடைய தேசத்திலே நீங்கள் மேற்கொள்கின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை வன்மையாக கண்டிப்பதாக அவர் இதன் போது தெரிவித்திருந்தார். (நி)

# வேகமாக பரவும் மண் காய்ச்சல்

# மருத்துவ சங்கம் அவசர அறிவிப்பு

(கொழும்பு)

**நீர் மற்றும் மண்ணின் ஊடாக பரவும் பக்டீரியா ஒன்றினால் மண் காய்ச்சல் எனப்படும் நோய் பரவி வருவதாக இலங்கை மருத்துவச் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சங்கத்தின் தலைவர் பேராசிரியர் இனோகா இதனை தெரிவித்துள்ளார்.

இந்த நோய் அதிகளவு உயிரிழப்பை ஏற்படுத்தும் என்றும் மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டம், வடமேல் மாகாணத்தின் புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்நோய் பதிவாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய மழையுடனான காலநிலையில் நீர் மற்றும் மண்ணின் ஊடாக பரவும் பக்டீரியாவினால் இந்த மண் காய்ச்சல் நோய் பரவி வருவதாகவும் அந்த சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

பாதங்களில் ஏற்படும் காயங்கள், அழுக்கு நீர் போன்றவற்றின் ஊடாக இந்த பக்டீரியாக்கள் உள்நுழைவதாக மருத்துவர் எச்சரித்துள்ளனர். (நி)

# வடக்கு ரயில் மார்க்கத்தை மேம்படுத்த மேலும் 15 மில்.டொலர் வழங்கும் இந்தியா

(கொழும்பு)

வடக்கு ரயில் மார்க்கத்தை மேம்படுத்த மேலும் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்க இந்திய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி, கொழும்பு மற்றும் காங்கேசன்துறை இடையில் ரயில் கடவைகளில் உள்ள சமிக்ஞை அமைப்பை நவீனமயமாக்குவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மார்க்கத்தில் ரயில் சேவைகள் தற்போது அநுராதபுரம் ரயில் நிலையத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த பாதையை நவீனப்படுத்துவதற்கு வசதியாக கொழும்பு காங்கேசன்துறைக்கான சேவைகள் இந்த வருடம் ஜனவரி மாதம் இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் இந்தியாவால் நீடிக்கப்பட்ட கடன் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்த பணிகள் இம்மாதத்தில் முடிவடைய இருந்த போதிலும் பல்வேறு காரணங்களால் தாமதமாகி வருகிறது.

இதேவேளை, கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பயண நேரம் ஒன்றரை மணி நேரத்தால் குறைக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (நி)

# ஹயஸ்-மோ.சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## தந்தை,மகன் ஸ்தலத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளா னதில் தந்தையும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு, பாதுக்கை பிரதேசத்தில் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய தந்தையும் 10 வயதுடைய மகனும் இந்தக் கோர விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மகனை மோட்டார் சைக்கிளில் தந்தை ஏற்றிக் கொண்டு வீட்டுக்குப் பயணித்த வேளையிலேயே கோர விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த 10 வயது சிறுவன் இவ்வருடம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புக்குச் சென்றிருந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஹயஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும்

## ஜனாதிபதி ரணில் மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் முன்வர வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், புலம்பெயர் தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்தாது பேசுவதற்கு முன்வர வேண்டும் எனவும் எந்த வேளையிலும் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, தான் தயாராகவே உள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். இத்தீர்மானம் குறித்து, பெரும்பாலான உறுப்பினர்கள் ஒத்துழைப்புகளை வழங்கி வரும் அதேவேளை சிலர் முரண்டுபிடிப்பதாவும் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# அரச திணைக்களங்களில் வீண்விரயங்கள் அதிகரிப்பு

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வீண் விரயங்கள் காணப்படுவதாகவும் இது நாட்டுக்கு பாரிய பிரச்சினை என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வரவு -செலவு திட்ட அலுவலகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், இந்த வீண்விரயங்களை கட்டுப்படுத்த முன்னுரிமையளித்து செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வீண்விரயங்களை குறைத்துக் கொள்வதே எமது இலக்காகும். அதனை முக்கியமான இலக்காகக் கொண்டு அதற்கு முன்னுரிமையளித்து நாம் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

யார் என்ன சொன்னாலும் திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வீண் விரயங்கள் கிடையாது என எவராலும் கூற முடியாது. இது நாம் முகங்கொடுக்கும் பாரிய பிரச்சினையாகும்.

சில புள்ளிவிபரங்களில் காணப்படும் பிழைகள் மற்றும் அதிலிருந்து திசை திருப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மோசடிகள் குறிப்பிடத்தக்கவை.



இவ்வாறான மோசடிக்காரர்களின் சுமையையும் இறுதியில் திறைசேரி அல்லது பாராளுமன்றத்திற்கே பொறுப்பேற்க வேண்டியுள்ளது. அது பொது மக்களுக்கான பாரிய பாதிப்புகளுக்கே வழிவகுக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## இலங்கையில்

# 9 திருநங்கைகளுக்கு எச்.ஐ.வி தொற்று

(கொழும்பு)

இலங்கையில் முதன் முறையாக எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான 9 திருநங்கைகள் இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்ட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான 9 திருநங்கைகள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் இவ்வாண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் மொத்தமாக 165 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவான அதிகபட்சமான தொற்றாளர்களின் எண்ணிக்கை இதுவாகும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
## 19.07.2023, 20.07.2023 மற்றும் 21.07.2023

உயர்பட்டங்கள், பட்டங்கள், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றை தகுதியளிப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா **19.07.2023, 20.07.2023** மற்றும் **21.07.2023**ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்களை **04.07.2023**ஆம் திகதி காலை **9.00** மணி வரை தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். மேலதிக விபரங்களுக்குப் பல்கலைக்கழக இணையத்தளம் www.jfn.ac.lk இனைப் பார்வையிடவும்.

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. முது வியாபார நிர்வாகமாணி
4. தூய சக்தித் தொழிநுட்பங்களில் முதுமாணி
5. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்
6. வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணி
7. பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணி
8. தாதியியல் சிறப்பு விஞ்ஞானமாணி
9. மருந்தகவியல் சிறப்புமாணி
10. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான சிறப்பு விஞ்ஞானமாணி
11. விஞ்ஞானமாணி சிறப்பு
12. பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி
13. கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி
14. விஞ்ஞானமாணி
15. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி
16. வியாபார நிர்வாகமாணி சிறப்பு
17. வணிகமாணி சிறப்பு
18. வியாபார நிர்வாகமாணி
19. வணிகமாணி
20. உயிர்முறைமைகள் தொழில்நுட்பமாணி சிறப்பு
21. பொறியியல் தொழில்நுட்பமாணி சிறப்பு
22. சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி
23. சித்திரமும் வடிவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி
24. நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி
25. கலைமாணி (opting)
26. கலைமாணி
27. சிறப்புச் சட்டமாணி
28. சித்த வைத்திய விஞ்ஞானமாணி
29. சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி
30. தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி
31. தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி
32. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமாணி
33. பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமாணி
34. கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி
35. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி
36. சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி
37. வியாபார முகாமைத்துவமாணி
38. கணக்கியலிலும் நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
39. சந்தைப்படுத்தல்முகாமைத்துவத்தில்சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
40. மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
41. வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
42. செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி
43. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சிறப்புமாணி
44. வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி)
45. வணிகமாணி (வெளிவாரி)
46. வணிகமாணி சிறப்பு (வெளிவாரி)

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள் படிவங்களைச் சமர்ப்பித்தல்**

அனைத்து விண்ணப்பதாரிகளும் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தின் ஊடாக வேண்டுகோள் படிவத்தினை **04.07.2023** காலை **9.00** மணிக்கு முன்னர் நிகழ்நிலையாக நிரப்பி விண்ணப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட செயல்முறையில் பின்வரும் ஆவணங்களைத் தரவேற்றம் செய்யும் போது ஒவ்வொரு ஆவணமும் 2MB இற்கு மேற்படாது 'Jpeg' அல்லது 'jpg' முறைவடிவில் இருத்தல் வேண்டும்.

1. பற்றுச்சீட்டு
2. பட்டச்சான்றிதழில் 'பெயரினை உறுதிப்படுத்தும் விண்ணப்பம் (பட்டதாரிகளுக்கு மட்டும்)

நிகழ்நிலையில் பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை தரவிறக்கம் செய்து கையொப்பமிட்டு மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் இணைத்து பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு **07.07.2023** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் **"37வது பட்டமளிப்பு விழா, (மாணவர் பதிவிலக்கம்:..............)"** எனக் குறிப்பிடவும்.

**அஞ்சல் முகவரி**

அனைத்து உள்வாரி விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**1. உதவிப் பதிவாளர்/அனுமதிகள் கிளை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

அனைத்து வெளிவாரி விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**2. உதவிப் பதிவாளர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**2. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக்கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச்சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | | |
|---|---|---|---|
| கட்டணம் | பட்டதாரிகள் | பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் | வெளிவாரிப் பட்டதாரிகள் |
| பட்டமளிப்பு விழாக்கட்டணம் | 3100 | 3700 | 3100 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | 1000 | 1200 | 1000 |
| பட்டச்சான்றிதழ்க் கட்டணம் | 1000 | 1200 | 1000 |
| புகைப்படக் கட்டணம் | 900 | 900 | 900 |
| **மொத்தக் கட்டணம்** | **6000** | **7000** | **6000** |
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் (குறிப்பிலக்கம்) | | | |
| நேரில் சமுகமளிப்பவர் | 970000052100308 | 970000082100310 | 890002460001794 |
| சமுமளிக்காதவர் | 970000052100340 | 970000082100351 | 890002460001794 |

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ பொருத்தமான முறையில் மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச்சீட்டில் குறிப்பிடவும். **மேற் குறிப்பிட்டபடி பொருத்தமான குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனைக் குறித்துக் கொள்க.**

**குறிப்பு:** பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப் படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

**3. பட்டதாரி மேலங்கி**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்கள் அவர்களுக்கான பட்டதாரி மேலங்கிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் ஆவணக்காப்பகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பட்டதாரி மேலங்கி விநியோகம் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**4. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு உள்வாரிப்பட்டதாரிகள் **021 222 6714** அல்லது admissions@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் மூலமும், வெளிவாரிப் பட்டதாரிகள் **021 222 3612** அல்லது mdlcrd@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொள்ளவும்.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய காலம்: 23.06.2023 இலிருந்து 04.07.2023 காலை 9.00 மணிவரை.**

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

**பதிவாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி அம்பன் களப்பில் விடப்பட்ட 7 ஆயிரம் மீன்குஞ்சுகள்




(அராலி)

யாழ்ப்பாணம்- வடமராட்சி கிழக்கு அம்பன் களப்பு பகுதியில் 75,000 மீன் குஞ்சுகள் நேற்றைய தினம் விடப் பட்டுள்ளன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மீன்பிடி பிரிவின் நிதி அனுசரணையில் குறித்த மீன் குஞ்சுகள் அம்பன் பகுதியில் நன்னீர்மீன்பிடியில் ஈடுபடும் சுமார் 500 வரையான நன்னீர் மீன்பிடியாளர்களின் தொழில் மேம்பாட்டினை கருத்தில் கொண்டு 250000 மீன் குஞ்சுகள் விடும் திட்டத்தின் கீழ் 75,000 மீன் குஞ்சுகள் விடப்பட்டு ள்ளன.

மிகுதி மீன் குஞ்சுகள் நன்னீர் ஏரியில் விடப்படவுள்ளன. (4-6-104)



அராலி மேற்கு நீலத்திக்காடு ஸ்ரீ பேச்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவமானது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக ஆரம்பமாகியது. இந் நிலையில் 7 ஆம் திருவிழா அன்று வேட்டைத் திருவிழா இடம்பெற்று, 9 ஆம் நாள் வேள்வி உற்சவத்துடன் திருவிழாவானது நிறைவடையும்.

(படம்-கஜிந்தன்)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 298.47 ரூபாவாக அதிகரித்து விற்பனை விலை 314.49 ரூபாவாக பதிவாகியுள்ளது.

மத்திய வங்கியினால் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட நாணய மாற்று விகிதத்தின் படி டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 362.66 ஆகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 1997...



(கொழும்பு)

உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் பகிடிவதைகள், போதைப் பொருள் பாவனை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து பொதுமக்கள் "1997" என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மாத்திரமே குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுக் கொள்கிறது. (நி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 08 1939



மறைவு 03 07 2022

அமரர் திருமதி. சரஸ்வதி பேரின்பநாயகம்

(சரஸ்வதி ரீச்சர்)

திதி- ஆனி மாத சதுர்த்தி

ஆண்டு ஒன்று ஓடினாலும் ஆறவில்லை எம் துயரம் உள்ளமோ ஆறவில்லை. விழி ஈரமோ காயவில்லை.உங்களை உருக்கியே உலகில் எமை வாழ வைத்தீர்கள்.
எமது அன்புத் தெய்வமே, உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

(16040) என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

மஞ்சத்தடி, இணுவில்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# இராசிபலன்

22.06.2023
ஆனி 07, வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 4.34 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 3.37 மணிவரை

சுபநேரம் -7.24-8.54 மணிவரை
இராகுகாலம்-1.24-2.54 மணிவரை
சதுர்த்தி விரதம், சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்- பூராடம்.

வளவன்




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், அருமையான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு,நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், போசன சுகமுண்டு.




திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியமான நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, அச்சுறுத்தல்கள் அகலும்.




உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.




திட்டமிட்ட பணிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்,பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, கௌரவக் குறைவான தேவை,




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கோபத்தோடு எழுந்திருப்பவன் நஷ்டத்தோடு உட்காருவான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் மாபெரும் இசைவேள்வி - 2023



அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் "ஸ்ரீ ராம நாம கானாமிர்தம்" இசைவேள்வி எதிர்வரும் ஜூன் மாதம் 29, 30, ஜூலை 1, 2 ஆகிய தினங்களில் யாழ்.நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த பிரபல இசை மேதைகளான திரு. அபிஷேக் ரகுராம், நெய்வேலி ஆர். சந்தான்கோபாலன், ஸ்ரீமதி எஸ்.சௌமியா, ஸ்ரீமதி அருணா சாய்ராம் ஆகியோர் பாடவுள்ளனர்.

முதலாம் நாள் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை தம்பதியர்கள் மங்கல விளக்கேற்றி இசை வேள்வியினை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

தொடர்ந்து கொழும்புக் கம்பன் கழகத்தின் பெருந்தலைவர் ஜெ.விஸ்வநாதன் தலைமையுரை நிகழ்த்துவார். அதன்பின்னர், யாழ். பல்கலைக்கழக இசைத்துறைப் போதனாசிரியர் க.வர்ஜிகனின் இசை நிகழ்ச்சி நடைபெறும். தொடர்ந்து, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த 'சங்கீத சூடாமணி' அபிஷேக்ரகுராமின் இசைப் பேரரங்கு நடைபெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வில் மாலை, யு.கே.ஈ. பிறைவேட் விமிட்டட்; பணிப்பாளர் எஸ். சிவகுமார் தம்பதியினர் மங்கல விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். தொடர்ந்து யாழ்.மாநகர ஆணையாளர் த.ஜெயசீலனின் தலைமையுரையுடன் விழா ஆரம்பமாகும் அதன்பின்னர், வைத்திய கலாநிதி செல்விலோ. சாய்லக்ஷ்மியின் இசையரங்கு நடைபெறும். தொடர்ந்து, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த 'சங்கீத கலாநிதி' நெய்வேலி ஆர். சந்தானகோபாலனின் இசைப்பேரரங்கு நடைபெறும்.

மூன்றாம் நாள் மாலை மாருதி மணி எக்ஸ்சேன்ஜ் பணிப்பாளர் க.ரவீந்திரன் தம்பதியர் மங்கல விளக்கேற்றி இசைவேள்வியினை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலை, பொது வைத்திய நிபுணர், வைத்திய் கலாநிதி சி.சிவன்சுதன் தலைமையுரை நிகழ்த்துவார். அதன்பின்னர், யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. திருமதி சுகன்யா அரவிந்தனது இசையரங்கு நடைபெறும். தொடர்ந்து, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த 'சங்கீத கலாநிதி' ஸ்ரீமதி எஸ். சௌமியாவின் இசைப்பேரரங்கு நடைபெறும்.

இறுதிநாள் மாலை வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜூவலரியின் பங்காளர் ஏ. பி. ஜெயராசா தம்பதியர் மங்கல விளக்கேற்றி இசைவேள்வியினை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். தொடர்ந்து தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையுரை நிகழ்த்துவார். அதன்பின்னர் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் செல்வி.பரமேஸ்வரி கணேசனின் இசையரங்கு நடைபெறும். நிறைவாக, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த 'பத்மஸ்ரீ' ஸ்ரீமதி அருணா சாய்ராமின் இசைப்பேரரங்கு நடைபெறும்.

இசைவேள்வி மாலை நிகழ்வுகள் 5 மணிக்கு ஆரம்பமாகும். இந் நிகழ்வுகளின் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் வி.எஸ்.கோகுல், மிருதங்கம் டெல்லி எஸ். சாய்ராம், கடம் எஸ். கிருஷ்ணா ஆகிய தமிழ்நாட்டுக் கலைஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

இறுதிநாளன்று காலை 9.30 மணிமுதல் ஸ்ரீ தியாகராஜர் உற்சவம் நடைபெறும். இவ் உற்சவத்தில் மூத்த மங்கல இசைக்கலைஞர்களான எம்.பி. பாலகிருஷ்ணன், கே.ஆர். சுந்தரமூர்த்தி, கே.ஆர். புண்ணியமூர்த்தி, வி.கே. பஞ்சமூர்த்தி, ஆர்.கேதீஸ்வரன் ஆகியோர் மங்கல் விளக்கை ஏற்றுவார்கள். உடுவில் பிரதேச செயலர் த.முகுந்தனின் தலைமையுரையுடன் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸனின் வாழ்த்துரையுடன் இசை ஆராதனை இடம்பெறும்.

இவ் உற்சவத்தில் இந்திய இசைக்கலைஞர்களுடன் ஈழத்தின் பிரபலமான மங்கல இசைக்கலைஞர்களும் பாடகர்களும் அணி இசைக்கலைஞர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். நிகழ்வில் பங்கேற்க இசை ரசிகர்கள் அனைவரையும் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு அகில இலங்கைக் கம்பன் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (4)

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் அடுத்த இலவச கண்பரி சோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் அடுத்த இலவச மருத்துவ முகாம் அன்றைய தினம் பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திர சிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய மருத்துவ மனைகளில் இருந்து யாழ். போதனா மருத்துவமனை அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா மருத்துவ மனையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள மருத்துவமனைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்கு வரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ள ப்படும்.

எனவே கண்புரை சத் திர சிகிச்சை மேற் கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய் யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)



விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் ஊடாக 33 வது இரத்ததான முகாமானது அமரர். செல்வன் தேவராசா நிறோஜின் 7 வது ஆண்டு நினைவாக தாவடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை 8.30-3.30 வரை நடைபெறவுள்ளது. (4)

# ஆங்கிலப் பாடக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் பிரதான பாடங்களில் ஒன்றாக மாணவர்கள் தெரிவு செய்யக்கூடிய ஆங்கிலப் பாடம் (ஆங்கில இலக்கியம் தொடர்பாக வடமாகாணத்திலே கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியிலே அறிவூட்டலினை வழங்கும் வகையிலான கருத்தரங்கு ஒன்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல், ஆங்கிலத்துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தக் கருத்தரங்கு நாளை மறுதினம் 24 ஆம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் புதிய பரீட்சை மண்டபத்திலே இடம்பெறும். 2023, 2024, 2025 ஆகிய வருடங்களிலே இடம்பெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளிலே ஆங்கிலப் பாடத்துக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள், தற்போது தரம் 10 மற்றும் தரம் 11இலே கல்வி பயிலும், எதிர்காலத்திலே உயர்தரத்தில் ஆங்கிலப் பாடத்தினைத் தமது பிரதான பாடங்களிலே ஒன்றாகத் தெரிவு செய்ய விரும்பும் மாணவர்கள் அல்லது இந்தப் பாடம் தொடர்பாக மேலும் அறிந்து கொள்ள விரும்பும் மாணவர்கள், உயர்தர வகுப்பு ஆங்கிலப் பாடத்திலே ஆர்வமாக இருக்கும் ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர் போன்றோர் இந்தக் கருத்தரங்கிலே பங்கேற்க முடியும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல், துவிச்சக்கர வண்டிகள், தொலைபேசிகள், சவள் மற்றும் இதர பொருட்கள் நீதிமன்ற வளாகத்தில் வைத்து நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலத்தில் குறித்த பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களை அன்றையதினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 700 | 600 |
| தக்காளி | 260 | 300 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 200 | 300 |
| கோவா | 300 | 250 | 300 | 300 |
| கரட் | 300 | 380 | 380 | 450 |
| பூசணி | 100 | 100 | 100 | 120 |
| புடோல் | 130 | 140 | 180 | 200 |
| வாழைக்காய் | 100 | 160 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 130 | 140 |
| பாகற்காய் | 500 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 280 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 450 | 400 | 350 | 400 |
| லீக்ஸ் | 320 | 300 | 380 | 400 |
| பீற்றூட் | 450 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 320 | 400 | 480 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 600 | 800 |
| போஞ்சி | 550 | 500 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 50 | 80 | 40 | 80 |
| தேசிக்காய் | 350 | 350 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 90 | 80 | 60-80 |
| இர்ாசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 550 | 600 | 800 |
| முள்ளங்கி | 130 | 170 | 180 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தனியார் கல்வி நிறுவனங்கள்

# எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாட்களும் ஓய்வின்றி கல்விச் செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களிற்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் சாதக, பாதக விளைவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தனியார் கல்வி நிலையப் பிரதிநிதிகள் மற்றும் வளவாளர்கள் சமூக ஆர்வலர்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல்.

பிள்ளைகளுக்கு ஏற்படும் மன அழுத்தங்களைக் குறைப்பதற்கும் பெற்றோர்-பிள்ளைகளுக்கான பிணைப்பை ஏற்படுத்துவதற்கும் பிள்ளைகள் பெற்றோருடன் அதிக நேரத்தை செலவிடக் கூடியதாக 9 ஆம் வகுப்பு வரை இணைப்பாடவிதான (கலை மற்றும் விளையாட்டு) செயற்பாடு தவிர்ந்த பாடத்திட்ட கல்வி செயற்பாட்டில் ஈடுபடும் சகல தனியார் கல்வி நிலையங்கள், பிரத்தியேகக் குழு வகுப்புக்கள், zoom தொழில்நுட்பமூடாக நடத்தப்படும் வகுப்புக்கள் என்பன ஜூலை முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஞாயிற்றுக்கிழமைகளில் முற்றாகவும் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரங்களிலும் வகுப்புகளை நடத்துவதை நிறுத்துதல்.

தனியார் கல்வி நிறுவனங்கள் சுகாதார வசதிகளைக் கொண்டதாகவும் மாணவர்களது கற்றல் செயற்பாட்டிற்கு ஏற்ற வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும்.

கல்வி செயற்பாட்டில் ஈடுபடும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக குழு வகுப்புக்களை நடத்துபவர்கள் தங்களுடைய நிறுவனம் சார்ந்த பதிவினை உள்ளூராட்சி சபைகளில் மேற்கொண்டு பிரதேச செயலகங்களிற்கு விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் தங்களது கல்விச் செயற்பாட்டிற்கு மேலதிகமாக 15-30 நிமிடங்களை ஒதுக்கி ஆன்மிகம் மற்றும் சமூக பொது விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

தற்போது கல்விச் செயற்பாட்டில் ஈடுபடும் சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப்பினை உருவாக்கி தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளை இலகுபடுத்துவதுடன் எதிர்காலத்தில் தமது கருத்துகளையும் கண்காணிப்புக்களையும் இவ் அமைப்பின் பிரதிநிதிகளினூடாக மேற்கொள்ளல்.

மேற்குறிப்பிட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் மற்றும் எதிர்காலங்களில் இச்செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் சுகாதாரத்துறை, பொலிஸார், கல்விசார் துறையினர், மதத்தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கி குழுக்களை அமைத்தல். இக்குழுவின் ஊடாக மாதாந்தம் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்து பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதை கண்காணிப்பதன் மூலம் சமூக மாற்றத்தை உருவாக்குதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (4-6-33)



ஒன்பதாவது சர்வதேச யோகா நாள் நிகழ்வு யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது. குறித்த நிகழ்வு யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது. யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட யோகா நாள் நிகழ்வில் யோகா பயிற்சி வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (படம்:-சிவசாந்தன்)






# கல்யாணமாலை சர்வதேச இலவச திருமண சேவை

## மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்:5' 4"
தகைமை/தொழில்:O/L நகைத்தொழில்
எதிர்பார்ப்பு: ஓரளவு படித்த பெண்
தொ.இ: B/13720

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 5 இல் சூரி.செவ்
கி.பா: 22 1/2
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: BA Teacher
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/13724

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்:5' 6"
தகைமை/தொழில்: A/L சிற்பவேலை
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/13727

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம் : கார்த்திகை
கி.பா: 43
உயரம் : 5' 4"
தகைமை/தொழில்: A/L காவலாளி (அரச) விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு: சாதாரண பெண்
தொ.இ: B/13730

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சித்திரை 11 இல் சூரி. செவ்
கி.பா:24
உயரம்:172 cm
தகைமை/தொழில்:BBA, MB வங்கியாளர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி/ அரச தொழில்
தொ.இ: B/13733

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்: MBBS Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT
தொ.இ: B/13734

பிறப்பு: 1993 RC
உயரம்:168 cm
தகைமை/தொழில்: MBBS
எதிர்பார்ப்பு: Doctor, Banker, Engineer
தொ.இ: B/13735

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம் : மகம்
உயரம் : 5' 11"
தகைமை/தொழில்: BSc, IT சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13738

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2 இல் சூரி. செவ்
கி.பா:40
உயரம்:5' 8"
தகைமை/தொழில்:BA Store keeper (அரச)
எதிர்பார்ப்பு: உத்தியோகம் உள்ள பெண்
தொ.இ: B/13740

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா:49
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: Diploma (இயந்திரவியல்) கள உத்தியோகத்தர் (அரச)
எதிர்பார்ப்பு: அரச தொழில்/ வெளிநாடு
தொ.இ: B/13741

பிறப்பு: 1994 RC
உயரம்: 172 cm
தகைமை/தொழில்: HND Civil Engineer
எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: B/13737

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம் : ரேவதி
கி.பா: 29
உயரம் : 185 cm
தகைமை/தொழில்: BSc, Computer Engineer
எதிர்பார்ப்பு:Engineer / Doctor/வெளிநாடு
தொ.இ: B/13742

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்:5' 8"
தகைமை/தொழில்:A/L வியாபாரம்/ சாரதி
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: B/13743

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 2
உயரம்: 170 cm
தகைமை/தொழில்: A/L Postman (அரச)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்/ உள்நாடு
தொ.இ: B/13745

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்:5' 8"
தகைமை/தொழில்: BSc, IT தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: B/13748

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம் : பூராடம்
கி.பா: 13 1/2
உயரம் : 5' 7"
தகைமை/தொழில்: A/L பிரான்ஸ்
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/13750

கல்யாணமாலை, இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- Kalyanamalai.jaffna@gmail.com. அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை.
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை. பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 210





"அண்ணா! இது என்ன?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"சொல்லுகிறேன், திருமலை! இனிமேல் நம்முடைய உறவெல்லாம் கோவிலுக்கு வெளியே இருக்கட்டும்.. நீ பதிதன் சிவ நிந்தனை செய்யும் சமயப் பிரஷ்டன் இந்தச் சிவாலயத்துக்குள் நீ அடியெடுத்து வையாதே! தெரிகிறதா? நானும் எத்தனையோ பொறுத்திருந்தேன். இன்றைக்குப் பெரிய மகாராணியின் முன்னால் நீ பேசியதை என்னால் சகிக்க முடியவில்லை. வீட்டுக்கு வேண்டுமானால் வந்து உன் பெரிய வயிற்றை நிரப்பிக் கொண்டு போ! ஆனால் கோவிலுக்குள் அடியெடுத்து வைக்காதே! அடி வைத்தால் நான் சண்டேசுவர நாயனார் ஆகி விடுவேன்!"

இவ்வாறு சொல்லி ஈசான சிவபட்டர் திருமலையின் கழுத்தைப் பிடித்து ஒரு தள்ளுத் தள்ளி விட்டு, கோயில் கதவைப் படார் என்று சாத்தினார் "அண்ணா! அண்ணா!.." என்று திருமலை ஏதோ சொல்ல ஆரம்பித்ததை ஒருகணமும் காது கொடுத்துக் கேட்காமல் கோவில் கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு போய் விட்டார்.

"ஓகோ! அப்படியா சமாசாரம்?" என்று ஆழ்வார்க்கடியான் முணுமுணுத்துக் கொண்டான். சற்று நேரம் அங்கேயே நின்றான். பிறகு, அச்சிவனார் கோவிலை, சமணர் முழைகள் உட்பட, இரண்டு மூன்று தடவை சுற்றி வந்தான். வலப்புறமாய்ச் சென்றால் பிரதட்சிணம் செய்ததாகி விடும் என்று வேண்டுமென்றே இடதுபுறமாகச் சுற்றி வந்தான். வட்ட வடிவமாக அமைந்திருந்த செய் குன்றுகளில் சமணர் முழை வாசல்கள் எல்லாம் நன்கு அடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தான். பின்னர், ஈசான சிவபட்டரின் வீடு சென்றான். வேடிக்கை வேடிக்கையாகப் பேசும் திருமலையிடம் பட்டரின் மனையாளுக்கு மிக்க பிரியம். அந்த அம்மாளிடம் வழக்கத்தை விட வேடிக்கையாகப் பேசி, வயிறு நிறையச் சிவன் கோயில் பிரசாதத்தைச் சாப்பிட்டு விட்டு, வாசல் திண்ணையில் வந்து படுத்தான்.

முதலாவது நாள் குடமுருட்டி நதிக்கரையோடு வந்த போது அவன் கண்ட காட்சி ஒன்று நினைவு வந்தது. அவனுக்கு எதிர்த் திசையில் சில குதிரைகள் வேகமாக வரும் சப்தம் கேட்டுப் பக்கத்தில் அடர்த்தியாக இருந்த மூங்கில் புதர்களுக்குப் பின்னால் மறைந்து கொண்டு நின்றான்.

முதலில் வந்த குதிரை தறிகெட்டு ஓடிவருவது போல் ஓடி வந்தது. அது சொட்டச் சொட்ட நனைந்திருந்தது. வியர்வையினாலா, நதி வெள்ளத்தில் முழுகி வந்ததினாலா என்று தெரியவில்லை. அக்குதிரையின் பேரில் ஒரு சிறு பிள்ளை உட்கார்ந்திருந்தான். அவனைக் குதிரையோடு சேர்த்துக் கட்டியிருந்தது. அந்தப் பிள்ளையின் முகத்தில் பீதியும் அத்துடன் ஓர் உறுதியும் சேர்ந்து காணப்பட்டன. சற்றுப் பின்னால் இன்னும் நாலைந்து குதிரைகள் வந்தன. அவற்றின் மீது வேல் பிடித்த வீரர்கள் வந்தார்கள்.

சீக்கிரத்தில் பிடித்து விடுவார்கள் என்று தோன்றியது. அவர்களில் ஒருவன் தன்னுடைய வேலாயுதத்தைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்து முன்னால் வந்த குதிரை மேல் எறிவதற்குக் குறி பார்த்தான். இன்னொருவன் அதைத் தடுத்தான்.

அச்சமயத்தில் அந்தப் பிள்ளை அடர்ந்த மூங்கில் புதர்களுக்குக் கீழே போக வேண்டியிருந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கலியுக கர்ணன்

(நேற்றைய தொடர்ச்சி)

"அதனால்... இன்று முதல் கேசவனுடைய சொத்துக்கெல்லாம் நானே சட்டபூர்வமான சொந்தக்காரன். இதுவரை அவன் ஊருக்கெல்லாம் வாரி வழங்கினான்.

இனி மேல் நான் அதற்கு சம்மதிக்க மாட்டேன் எல்லாரும் வீட்டிற்கு போங்கள்," என்று சொன்னான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கேசவனுக்கு தலை சுற்றியது. மயக்கம் வருவது போலிருந்தது. குழம்பி போய்க் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்தான்.



மாணிக்கம் பேச்சைக் கேட்ட ஊர் மக்கள் அனைவரும் வெளியே [illegible]க் கொண்டிருந்த[illegible]ர். மக்களை நோக்கி, "போகாதீர்கள் போகாதீர்கள்!" என்று கத்தினான் கேசவன்.

அதற்கு அவர்கள் "போய்யா! போ. இனியும் உன் பேச்சைக் கேட்பதற்கு நாங்கள் ஒன்றும் மடையர்கள் இல்லை.

இனி நீயும் எங்களைப் போல் ஒரு ஏழைதான்," என்று கூறி விட்டு "வாருங்கள் போகலாம்!" என்று ஒருவன் கையசைக்க, அனைவரும் அவனைத் தொடர்ந்து சென்றனர்.

அனைவரும் சென்றவுடன் தன்னிந்தனியாக கவலையோடு ஒன்றும் புரியாமல் நின்றிருந்த கேசவன் தோளில் தட்டிய மாணிக்கம், "வா உள்ளே போகலாம்," என்றான். கேசவன் எதிலும் விருப்பமின்றி, வெறுப்புடன் அவனுடன் சென்றான். வீட்டிற்குள் நுழைந்ததும் மாணிக்கம் வயிறு வலிக்கச் சிரித்தான்.

ஒன்றும் புரியாதவனாய் கேசவன் விழிக்க, மாணிக்கம் கேசவனை நோக்கி, "அதிர்ந்து விட்டாயா ? உன் தந்தை என் தந்தையிடம் நிலங்களை விற்கவும் இல்லை . என் தந்தை வாங்கவும் இல்லை. "பிறகு நான் ஏன் பொய் சொன்னேன் என்று பார்க்கிறாயா ?

நீ இரக்கம் காரணமாக மக்களுக்கு கண்மூடித்தனமாக வாரி இரைத்தாய். உன்னைப் புகழின் உச்சியில் வைத்து மதுவை விட அதிகமான போதையை உண்டாக்கி உன்னால் இலாபம் அடைந்து வந்தனர் மக்கள். "அவர்களை அடையாளம் காட்டவே, இனி உன் சொத்துக்கெல்லாம் நானே சொந்தக்காரன் என்று சொன்னேன்.

இதைக் கேட்டு நீ ஒன்று மில்லாதவன் என்று தெரிந்த ஊர் மக்கள் நீர் இல்லாத குளத்தை விட்டு காக்கைகள் பறந்து செல்வதைப் போல், உன்னை விட்டு ஓடி விட்டனர்.

இந்த நன்றி கெட்டவர்களிடம் இனி, நீ இப்படி நடக்க வேண்டாம்?" என்றான் மாணிக்கம்.

"நண்பா! என்னை வஞ்சித்து வாழ்ந்த வர்களை உன்னால் அடையாளம் கண்டு கொண்டேன். இனி ஆற்றில் போட்டாலும் அளந்து தான் போடுவேன்.

புகழ் போதையில் மூழ்க இருந்த என்னை கை கொடுத்து தக்க சமயத்தில் காப்பாற்றி விட்டாய். உனக்கு நான் எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை ," என்று நா தழுதழுக்க கூறினான் கேசவன்.

நீதி: இரக்கம் காட்டலாம். ஆனால், ஏமாளியாகி விடக் கூடாது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்காக நிர்ணயிக்கப்பட்டது உன்னை ஒரு நாள் அடைந்தே தீரும்

– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையில் இன அழிப்பு நடந்ததை உலகம் ஏற்றுக் கொள்ளும்வேளை இது

தமிழ் மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் செனட்டர் டேவிட் சூபிரிட்ஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்தது இனப் படுகொலை என்பதை அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் செனட்டர் டேவிட் சூபிரிட்ஜ் எடுத்துரைத்தார்.

இவ்வாறு அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் சூபிரிட்ஜ் கூறுவதற்கு அடிப்படையாக அமைந்தது எங்கள் புலம்பெயர் தமிழ் மக்கள் அங்கு மேற்கொண்ட பிரசார நடவடிக்கையாகும்.

ஆம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் அவுஸ்திரேலியா வாழ் ஈழத் தமிழ் மக்கள், வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்தது தமிழ் இன அழிப்பு என்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்தனர்.

இதன் விளைவே அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில்; இலங்கையில் நடந்தது தமிழ் இனப் படுகொலை என்ற செனட்டர் டேவிட் சூபிரிட்ஜின் உரையாகும்.

ஆக, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் நின்றுவிட்டது. இனி தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிக் கதைப்பதற்கு எவரும் இல்லை என்று சிங்களப் பேரினவாதிகள் நினைத்திருக்கலாம்.

ஆனால் இப்போதுதான் ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் இருக்கக் கூடிய நியாயத்துவம் உலக நாடுகளால் உணரப்படுகிறது.

ஆம், இலங்கையில் நடந்தது தமிழ் இன அழிப்பு என்பதை கனடா ஏலவே கூறிவிட்டது.

கனடாவின் இந்த அறிவிப்பால், அதிர்ந்து போன இலங்கை ஆட்சியாளர்களும் சிங்களப் பேரினவாதிகளும் கனடாவுக்கு எதிராகக் குரல் கொடுத்தவண்ணமுள்ளனர்.

இவ்வாறு கனடாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஆறமுன்னதாக, அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில், இலங்கையில் நடந்தது இன அழிப்பு என அந்த நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார் எனில் இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு என்பதை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டன என்பதே அதன் பொருளாகும்.

எனவே இந்த நாட்டின் ஆட்சியாளர்களும் பெளத்த பீடங்களும் பேரினவாதிகளும் நினைப்பதுபோல, தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்காமல் காலத்தைக் கடத்த முடியாது.

இதனையே இலங்கை தொடர்பில் அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரை நிரூபிக்கிறது.

உண்மை, வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழின அழிப்புப் போர் நடந்து 14 ஆண்டுகள் கடந்த பின்புதான் அந்தப் போரின் கொடுமையை – அது திட்டமிட்ட தமிழின அழிப்பு என்பதை உலக நாடுகள் அங்கீகரித்து வருகின்றன.

உலக நாடுகளின் இந்த அங்கீகாரம் சர்வதேச விசாரணையாக மாறும்போது, குற்றம் செய்தவர்கள் நிச்சயம் தண்டனை பெற்றே ஆக வேண்டும்.

இதிலிருந்து தப்பிக்க முடியும் என்று யார் நினைத்தாலும் அது ஒருபோதும் சாத்தியப்படமாட்டாது.

# கருத்து சுதந்திரம் பாதுகாக்கப்படும் ஊடகங்கள் ஒடுக்கப்படமாட்டாது

## அமைச்சர் மனுச நாணயக்கார

(கொழும்பு)

அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் செயற்படும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம். அதேநேரம் சரியான தகவல்களை மக்கள் பெற்றுக் கொள்ளும் உரிமையும் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரண்டு விடயங்களையும் முன்னிலைப் படுத்தியே நாம் இந்த சட்டமூலத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த சட்டமூலத்தின் ஊடாக ஊடகங்கள் ஒருபோதும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படமாட்டாது.

யாரேனும் பிழையான தகவல்களை வழங்கினால் அதற்கான ஒரு நெறிமுறையை கொண்டு வருவதற்கே நாம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த சட்டமூலத்தைக் கொண்டுவர கடந்த காலங்களிலும் ஆராயப்பட்டது. 1997 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. அந்தவகையில் உயர்நீதிமன்ற தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தும் வகையிலான சரத்துக்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விடயம் தொடர்பாக அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடவும் தயாராகவே உள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## மோட்டார் சைக்கிளை உடைத்து முக்கிய ஆவணங்கள் திருட்டு

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தங்கேணி பிள்ளையார் ஆலய வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்த பல ஆவணங்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் பெண்ணொருவர் குறித்த ஆலயத்திற்கு வருகை தந்து மோட்டார் சைக்கிளை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே சென்றுள்ளார்.

இதன்போது அவ்விடத்திற்கு வந்த நபரொருவர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குருக்களின் மோட்டார் சைக்கிளை திருட்டுத் திறப்பு மூலம் திறக்க முயற்சித்துள்ளார். அது பலனளிக்காமல் போக அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த பெண்ணுடைய மோட்டார் சைக்கிளை திறந்து அதில் இருந்த 80 ஆயிரம் ரூபா மதிக்கத்தக்க தொலைபேசி உட்பட முக்கிய ஆவணங்களையும் திருடிச் சென்றுள்ளார். இது குறித்து அந்த பெண் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த சம்பவம் அங்கிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ள நிலையிலும் வட்டுக்கோட்டை பொலிஸார் இதுவரை திருடனை கைது செய்யவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-7,104)

## மருதங்கேணி விவகாரம் இரு ஊடகவியலாளர்களிடம் இரு மணி நேர விசாரணை

(கிளிநொச்சி)

மருதங்கேணி விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்களிடம் கிளிநொச்சி இரணைமடு பகுதியில் உள்ள பிராந்திய குற்ற விசாரணை பிரிவினரால் நேற்று இரண்டு மணி நேர வாக்குமூலம் பெறப்பட்டது.

கிளிநொச்சி பிராந்திய குற்ற விசாரணை பிரிவினரின் அழைப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் த.பிரதீபன் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் த.பரமசிவன்(சிவா) ஆகியோர் குறித்த வாக்கு மூலத்தை வழங்கினர்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் யூன் 2ம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்ட கூட்டத்தில் புலனாய்வுப் பிரிவினைச் சேந்தவர் சென்றிருந்த நிலையில் குழப்பமான நிலை ஏற்பட்டதுடன் சமூக வலைத்தளங்களில் வீடியோக்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

குறித்த காணொளிகள் மற்றும் செய்திகள் ஊடகங்களில் வெளியானமை தொடர்பாகவே குறித்த ஊடகவியலாளரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ம-7)

## கட்டுத்துவக்கு வெடித்ததில் நபரொருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

பளைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி கோவில் வயல் பகுதியில் காணி ஒன்றினை பார்க்கச்சென்ற நபரொருவர் அப்பகுதியில் காணப்பட்ட கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயம் அடைந்துள்ளார்.

இதில் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த பிலிப்பையா ஸ்ரனிலஸ் என்பவரே படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250,60)

### திருட்டுடன் தொடர்புடைய

## 21 வயது இளைஞன் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா குருமன்காடு பகுதியில் உள்ள இரண்டு வீடுகளில் 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மற்றும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை திருடியமை மற்றும் வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளை திருடியமை, அத்துடன் வவுனியா மில் வீதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் கோயில் உண்டியல் உடைத்து பணம் திருடியமை மற்றும் ஒலிபெருக்கி திருடப்பட்டதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த நகையினை வீட்டில் வைத்து விட்டு வீட்டார் வவுனியா நகருக்கு வேலை நிமித்தமாக சென்று விட்டு வீடு திரும்பிய போது வீட்டின் பின்கதவு திறக்கப்பட்டு இருந்ததுடன் வீட்டு அலுமாரிகளும் திறக்கப்பட்டிருந்தன. வீட்டு அலுமாரிகளை பார்வையிட்ட போது அதில் இருந்த நகைகளை காணவில்லை. இதனையடுத்து வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு அடைவு வைக்கப்பட்ட நிலையில் நகையும் மீட்கப்பட்டதுடன் ஆலய ஒலிபெருக்கியும் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், மகாறம்பைக்குளம் (தாஸ் நகர்), மகாறம்பைக்குளம் பிள்ளையார் வீதி பகுதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

# சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம்வழங்கும்திகதி :- 23.06.2023 ஆம் திகதி தொடக்கம் 13.07.2023 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 14.07.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 14.07.2023 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

| தொ. இல | கடை விபரம் | தற்போதைய மாதாந்த வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்மாடிக் கடை இல 1/1 | 6,000.00 | 1,440,000.00 | 22,000.00 | 2,000.00 |
| 02 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்மாடி கடை இல 2/1 | 7,000.00 | 1,680,000.00 | 25,000.00 | 2,000.00 |
| 03 | கொக்குவில் மீன்சந்தை கட்டடத்துடன் அமைக்கப்பட்ட புதிய கடைத்தொகுதி | 7,500.00 | 1,800,000.00 | 27,000.00 | 2,000.00 |
| 04 | கொக்குவில் தபால் அலுவலகத்தின் மேல்தளத்தில் அமைக்கீப்பட்ட கடைத்தொகுதி | 17,000.00 | 4,080,000.00 | 61,000.00 | 2000.00 |
| 05 | கடை இலக்கம் 03 (இருபாலை ஜயப்பன் கோவிலடி) | 2,000.00 | 480,000.00 | 7,000.00 | 2000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
5. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விதாரர் தமது கேள்வித் தொகையினை ஒரே தடவையில் 25.07.2023 ஆம் திகதி செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது.
7. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையையும் மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் ஏனைய வரியும் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
8. மாதாந்த வாடகைப் பணத்தினை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்துதல் வேண்டும். தவறின் கட்டுப்பணத்தின் 10% தண்டப்பணம் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
9. முற்குறிப்பிட்ட 7, 8 ஆவது நிபந்தனையின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
10. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
12. சித்திகர வாடகை உடன்படிக்கையாளர் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்று மாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
13. சித்திகர வாடகை உடன்படிக்கையாளர் நல்லூர் பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
14. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

**22.06.2023**
(C-6789)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு மூத்தவிநாயகர் சனசமூகநிலையம், மு.ப 11 மணிக்கு ஆசீர்வாதப்பர் வீதி சுகாதார கல்வி மையம்,பி.ப 2.30 மணிக்கு நாயன்மார் வீதி சுகாதார கல்வி மையம், 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாக்கோவா பாலர்பாடசாலை, மு.ப 11.00 மணிக்கு வெயிலுகந்த பிள்ளையார் கோவில் செம்மணி வீதி, பி.ப 2.30 மணிக்கு கடுக்காய் வீதி, 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தி, மு.ப 11.00 பருத்தித்துறை வீதி உயர் கல்லூரி அருகாமை, பி.ப 2.30 அரசடி ஜனசக்தி சனசமூக நிலையம், 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு பழம் வீதி ஞானசோதி சனசமூகநிலையம், மு.ப 11.00 மணிக்கு சிவன் புது வீதி, பி.ப 2.30 மணிக்கு மணல் தரை லேன், 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஜமுனா வீதி கல்வி நிலையம், மு.ப 11 மணிக்கு சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதி, பி.ப 2.30 மணிக்கு செட்டியார் தோட்டம், 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு வைமன் வீதி எடிசன் அக்கடமி அருகாமை, மு.ப 11 மணிக்கு அம்மன் வீதி, பி.ப 2.30 மணிக்கு முத்தமிழ் முன்பள்ளி ஆடியபாதம் வீதி, 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு சங்கிலியன் வீதி, மு.ப 11 மணிக்கு கொண்டலடிச் சந்தி, பி.ப 2.30 மணிக்கு கோவில் வீதி பண்டாரக்குளம், 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு செட்டித்தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையம், மு.ப 11 மணிக்கு நல்லூர் குறுக்குத்தெருச் சந்தி, பி.ப 2.30 மணிக்கு கைலாயப்பிள்ளையார் கோவிலடி கோயில் வீதி, 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு துர்க்காமணி மண்டபத்தடி கோவில் வீதி,மு.ப 11 மணிக்கு பண்டாரக் குளம் இந்துமா மன்றம் , பி.ப 2.30 மணிக்கு கொண்டலடி குமார வீதி ஆகிய இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அத்துடன் ஒரு நாய்க்கான உரிமம் கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ்.மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4)

# திருத்த வேலைகளின் பின் மீண்டும் சேவையை ஆரம்பித்தது குமுதினி படகு



(யாழ்ப்பாணம்)

நீண்ட நாட்களுக்கு பின்னர் மீண்டும் தனது சேவையை குமுதினி படகு தொடங்கவுள்ளது.

யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் பகுதிக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினி படகு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பழுதடைந்துள்ளது.

படகின் திருத்த வேலைகள் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை பகுதியில் இடம்பெற்றது. படகின் திருத்த வேலைகள் முடிவடைந்த நிலையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை படகினை கடலுக்குள் இறக்குவதற்கு முன்னர் பாரம்பரிய முறைப்படி பொங்கல் பொங்கி படைக்கப்பட்டு, படகு கடலினுள் இறக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடல் போக்குவரத்து தொடர்பிலான அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் படகின் தரம் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பில் ஆராய்ந்து பயணிகள் சேவைக்கு அனுமதி வழங்கிய பின்னர் மீண்டும் குமுதினி படகு சேவையில் ஈடுபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-33)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படவுள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த ஒரு வருட காலக் கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 28 ஆம் திகதி ஆகும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து ஒரு வருடகால துறைசார் அனுபவமுடைய யாவரும் இக்கற்றை நெறிக்காக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் சி.சிவேசன் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய கம்மன்...

தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலைக்கு நேற்று உதய கம்மன்பில விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வருகை தருவதற்கு முன்னதாக குருந்தூர்மலை அடிவாரத்தில் ஒன்றுகூடிய தண்ணிமுறிப்புக்குரிய மக்களும் மக்கள் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற்பாட்டாளர் அ.பீற்றர் இளஞ்செழியன், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

உதயன் கம்மன்பில குருந்தூர் மலைக்கு விஜம் மேற் கொள்ளவுள்ள நிலையில், குருந்தூர்மலை அடிவாரம் மற்றும் குருந்தூர்மலையை அண்டிய பகுதிகளில் அதிகளவில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மூவர் படு...

தர்மபால கல்லூரிக்கு அருகில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 8.00 மணியளவில் கல்லூரிக்கு அருகில் உள்ள மருத்துவ ஆய்வு கூடத்தில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

T-56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார். உயிரிழந்தவர் 33 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஹோமாகம - நியந்தகல மற்றும் காலி- இத்தருவா ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற இருவேறு துப்பாக்கி பிரயோகங்களில் இருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழர்...

நேற்று குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக அவ்விடத்திற்கு விஜயம் செய்து மக்களுடன் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பகுதியில் இருந்து கொழும்பிற்கு வரும் அரசியல்வாதிகளே சில பிரச்சினைகளை வேண்டுமென்றே உருவாக்குகின்றார்கள் என்றார்.

உண்மையை உண்மையான கண்கொண்டு காணவேண்டும் என்பதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம்.

இது 2100 வருடங்கள் பழமையான விகாரை. இலங்கை என்பது எங்களுடைய உரிமை கிடையாது. அது முழு உலகிற்குமான உரிமையாகும்.

இவ்வாறான பழைமையான விடயங்கள் வேறு நாடுகளில் இல்லை. இது எம் எல்லோருக்கும் உரித்தானது ஆகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மக்களின் கோரிக்கை தொடர்பில் தொல்பொருள் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களத்துடன் கலந்துரையாடி இதற்கான தீர்வுகள் எட்டப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## விரைவில்...

யிலான அண்மைய சந்திப்புக்களில், புதிய பதவிகளை பொதுஜன பெரமுன கோரியுள்ளது.

எவ்வாறாயினும் தற்போதுள்ள நெருக்கடிகள் மற்றும் பொருளாதார இன்னல்களுக்கு மத்தியில் செயற்படக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே அமைச்சு பதவிகள் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஜனாதிபதி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை ஒப்படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ம-7)

## எரிந்த...

மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வீடு தீப்பற்றி எரிவதை கண்ட அயலவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மாநகரசபை தீயணைப்பு பிரிவினர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து வீட்டிற்குள் சென்றபோது குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து, மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)

## 194 பாடசாலை...

ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் நேற்று பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கில் நாங்கள் ஏறக்குறைய 194 பாடசாலைகளை மூடியிருக்கின்றோம். அதாவது பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமையால் மூடப்பட்டிருக்கின்றன. இதற்கு என்ன காரணமென நாம் ஆராய்ந்தபோது கிராமப்புறங்களிலிருந்து மாணவர்கள் நகரப்புறங்களை நோக்கி செல்கின்றார்கள், இரண்டாவது காரணம் பிறப்பு விகிதம் குறைவு, இதே விடயம் நான் மட்டக்களப்பில் அரசாங்க அதிபராக ஏழு வருடங்கள் இருந்தபோது கிராமப்புறங்களிலே பாடசாலைகளை மூடியிருந்தோம். அதற்கு பிரதேச செயலாளர்கள் கூறிய காரணம் பிறப்பு விகிதங்கள் குறைவடைந்து செல்கின்றது என முதலாம் வகுப்பிலே மாணவர்களை அனுமதிப்பது சில பாடசாலைகளில் பூச்சியம் அளவுக்கு செல்வதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த சமூகத்திலேயே சில விடயங்கள் அதிகரித்து காணப்படுவதாக புள்ளி விபரங்கள் எங்களுக்கு கூறுகின்றன.

அதாவது விவாகரத்து பெறுபவர்களின் தொகை அதிகரித்து காணப்படுவதாகவும் இரண்டாவது குழந்தை பேறு குறைந்து காணப்படுவதாகவும், வயது சென்ற திருமணங்கள் அதிகரித்திருப்பதாகவும் அதேபோன்று இன்னும் சில சமூக பிரச்சினைகள் இருக்கின்றது. குடிபோதை, போதைவஸ்து, தற்கொலைபோன்ற பல்வேறு பிரச்சினைகள். எனவே இவற்றை எல்லாம் கடந்து எமது சமூகம் வாழ வேண்டும் என்றால் புலம்பெயர் சமூகம் ஆற்ற வேண்டிய பணி அதிகம் இருக்கின்றது.

வெறும் அரசியல், உரிமைசார் பிரச்சினைகள்மட்டும் எமக்கில்லை என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்றுநினைக்கின்றேன்இளைய சமூகத்தினரிடமும் மாணவர்களிடை

யேயும், குடும்பங்கள், சிறுவர்களிடையேயும் புரையோடி போயிருக்கும் சமூக உள நல பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டிய தேவையும் அவசரமும் எங்களிடம் இருக்கின்றது என்றார். (ம-7,299)

## சீஷெல்ஸ் – இலங்கை
# நேரடி விமான சேவைகள் ஆரம்பம்

சீஷெல்ஸிற்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, சீஷெல்ஸில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நேற்றுக் காலை விமானமொன்று வருகை தந்தது.

இந்த விமானத்தில் 110 பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

சீஷெல்ஸ் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானம், வாரத்தின் புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகாலை 4 மணிக்கு நாட்டிற்கு வருகை தந்து, மீண்டும் காலை 7.30க்கு. சீஷெல்ஸ் நோக்கி பயணிக்கவுள்ளது

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1607
வெற்றி இலக்கங்கள்
கன்னி 7 0 3 6 3 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1182
J 13 35 38 48
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9436

கொவிசெத
திகதி 2023.06.21 சீட்டிழுப்பு இலக்கம் 3394
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Q 11 23 28 34
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 21/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1500
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
S 14 18 21 25 69

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.21
சீட்டிழுப்பு இலக்கம் 461
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 17 46 51 62 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/21
சீட்டிழுப்பு இலக்கம் 5152
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 5 1 4 2 3 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2126 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.06.21 தினம் புதன்கிழமை
G 14 15 19 70
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,852,700/-
DLB www.dlb.lk

சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.06.21
வெற்றி வாரம்: 4287
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,162,675.60
வெற்றி இலக்கங்கள்
08 22 24 74 X
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 4,360,930.80
திகதி 2023-06-21
வெற்றி வாரம் 3838
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 36 46 54 61 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,655,050.80

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 09 15 28 50 71
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1302
வர்ணம் வெளிர் நீலம்
திகதி 2023.06.21 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 339,680,127.00
DLB தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


ஜயோதா Jayoda
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.06.21
வெற்றி வாரம்: 1932
வர்ணம் : மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,229,795.60
வெற்றி இலக்கங்கள்
08 15 33 62 F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 1952
சீட்டிழுப்பு திகதி : 2023.06.21
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 53,025,577.20
வெற்றி இலக்கங்கள்
01 07 30 33 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் விகாரையை இராணுவமே அமைத்தது

## உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில் தொடர்ந்தும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர் இதேவேளை இராணுவத்தினரின் பங்களிப்புடனேயே குறித்த விகாரை பணி இடம் பெற்றது என்பதை அங்கு புதிதாக அமைக்கப்பட்ட கல்வெட்டுமூலம் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த குருந்தூர் மலை பிரதேசத்தில் தொடர்ந்தும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதோடு இங்கு வருங்கதருபவர்களை,. வாகனங்களை பதிவு செய்துவருகின்றனர்.

இதன் மூலம் மீண்டும் குருந்தூர் மலையில் திட்டமிட்டு மேற்கெள்ளப்பட்ட பௌத்தமயமாக்கல் முயற்சி அம்பலமாகியுள்ளது குறிப்பாக 79 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் எடுத்து அங்கு நீதிமன்ற கட்டளைகளை மீறி இராணுவத்தை கொண்டு விகாரை அமைத்துள்ளதோடு மேலும் மக்களின் 279 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க தொல்பொருள் திணைக்களம் முயற்ச்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நள்ளிரவில் பயணித்தவரிடம் கத்திமுனையில் வழிப்பறி

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் நள்ளிரவில் பயணித்த ஒருவரிடமிருந்த பணம், நகை, கைக்கடிகாரத்தை வழிப்பறி கொள்ளையர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடி வீதியில், நேற்று முன்தினம் 11.30 இற்கும் அதிகாலை 12.30 இற்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்த வழிப்பறி கொள்ளை நடந்துள்ளது.

மானிப்பாயை சேர்ந்த ஒருவர் குறித்த வீதியில் பயணித்த தன்னிடமிருந்து பணம், நகை, மணிக்கூடு பறிக்கப்பட்டதாக அவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த தன்னை ஒருவர் தடுத்து நிறுத்திய பின்னர் மூவர் வந்தனர். ஒருவர் கத்தியை எடுத்து கழுத்தில் வைக்க, மற்றொருவர் இடது கன்னத்தில் அறைந்துள்ளார்.

24,500 ரூபா பெறுமதியான சிட்டிசன் கைக்கடிகாரம், 160,000 ரூபா பெறுமதியான மோதிரத்தை பறித்தெடுத்த திருடர்கள், தன்னிடமிருந்த 263,000 ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக அவரது முறைப்பாட்டில், தெரிவித்துள்ளார்.

இந்த கொள்ளையர்களை மீண்டும் பார்த்தால் அடையாளம் காண முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-7)

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)
A/L தொழில்நுட்ப பிரிவு
இறுதிச் சந்தர்ப்பம்
செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்
❖ உயிர்முறைமை தொழில்நுட்பம்
❖ பொறியியல் தொழில்நுட்பம்
மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு
ஆரம்பம் : 24.06.2023 (சனிக்கிழமை) காலை 9.30
தொடர்புகளுக்கு : 077 017 5346
(C-6791)

## ஐ.நா...

சுட்டிக்காட்டியுள்ள இலங்கை அரச பிரதிநிதி, அரசியலமைப்புக்கு உட்பட்டே பொறுப்புகூறல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என வலியுறுத்தியுள்ளார்.

மேலும் உரையாற்றிய அவர், தற்போது எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு மத்தியிலும் அரசியலமைப்புக்கு உட்பட்டு, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புகூறலுக்கான நீண்டகால நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அரசாங்கம் தொடர்ந்தும் கவனம் செலுத்திவருகின்றது.

சர்வதேச நாணயு நிதியத்தின் நிதி உதவிக்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது. தேவையான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படும் அதேவேளை, சமூக பாதுகாப்பு திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளை அனைத்து சமூகங்களுக்கு இடையிலும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணுவது குறித்து அரசாங்கம் மனதில் வைத்து செயற்படுகின்றது.

சட்டரீதியான மறுசீரமைப்புக்கள் நிறுவன செயற்பாடுகள், காணிப் பிரச்சினைகள், கைதிகளின் விடுதலை, அதிகாரப் பகிர்வு,உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தேசிய காணி பேரவை, காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் ஆகியன குறித்து கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதி சந்திப்பொன்றை நடத்தினார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து அனைத்து தரப்பினருடனும் மேலதிக கலந்துரையாடல்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்யும் அதேவேளை சர்வதேச தரத்திற்கு அமைய அதனை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஊழல் எதிர்ப்புச் சட்டம், உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு, அது தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அது நேற்று பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு தொடர்பான அனுபவம் தொடர்பில் ஆய்வு செய்வதற்காக சென்றிருந்தனர்.

இந்தப் பொறிமுறை இலக்கைக்கு பொருத்தமானதாக இருக்கும் அதேவேளை, அதனை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இது தொடர்பான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக ஆலோசனைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி செயலாளரை அனு மதிக்கும் வகையில் அமைச்சரவை அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் அலுவலகம் 3 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

காணாமல் போனோர் பற்றிய சான்றிதழை வழங்குவதையும் ஜனாதிபதி துரிதப்படுத்தியுள்ளார்.

இராணுவம் வசமிருந்த 92 வீதமான காணிகள் உரிய உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றார். (ம-7)

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-6793)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
(C-6793)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வீடு வாடகைக்கு
42 வது லேன்
வெள்ளவத்தையிலுள்ள
இரண்டு அறைகள்,குசினி,
இரண்டு Bathroom களுடன்
கூடிய அடுக்குமாடி வீடு நாள்,
கிழமை, மாத வாடகைக்குண்டு
(16044)
075 278 6033

வாகனம் விற்பனைக்கு
டேஸ் 58
நீட்ட மொடல் 113
சுபர் G.L
51 இலட்சம்
(16047)
127, Navlar Road, Jaffna.
077 494 4653

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=
(16033)
T.P:077 544 8503

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
❑ பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
❑ புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
❑ மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
❑ வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
❑ ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
❑ பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
❑ நன்னீர் ஊற்று.
(16048)
076 733 6047
076 755 8606

யாழ்.இந்துக் கல்லூரி
சுற்று வட்டம் அருகில்
கடலை வடை - 20/-
பற்றிஸ் - 25/-
சம்சா - 25/-
மோதகம் - 30/-
றோல்ஸ் - 40/-
உ.வடை - 50/-
பூந்தி லட்டு - 40/-
ப.உருண்டை - 40/-
(16037)
கோவில் திருவிழாக்கள்,
நிகழ்வுகளுக்கு ஓடர் செய்ய
077 275 9799

வேலை வாய்ப்பு
சுழிபுரம் பகுதியில் உள்ள
உணவகத்திற்கு உணவு
தயாரிப்பு உதவியாளர்
வேலைக்கு ஆட்கள் தேவை.
(பெண்கள்)
(16045)
076 779 7674

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் இல. 131, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org